VI-வெப்பம்பெருவம்-2)

சரியான விடையைத் தேர்ந்தெடு

1) ஒரு பொருளை வெப்பப்படுத்தும் பொழுது, அதிலுள்ள மூலக்கூறுகள்

அ) வேகமாக நகரத் தொடங்கும் ஆ) ஆற்றலை இழக்கும்
இ) கடினமாக மாறும் ஈ) லேசாக மாறும்

2) வெப்பத்தின் அலகு .....

அ) நியூட்டன் ஆ) ஜூல்
இ) வோல்ட் ஈ) செல்சியஸ்

3) 30° C வெப்பநிலையில் உள்ள ஒரு லிட்டர் நீரும், 50° C வெப்பநிலையில் உள்ள ஒரு லிட்டர் நீரும் ஒன்றாகச் சேரும்பொழுது, உருவாகும் நீரின் வெப்பநிலை.

அ) 80° C
ஆ) 50° Cக்கு மேல் 80Cக்குள்
இ) 20° C
ஈ) ஏறக்குறைய 40° C

4)50° C வெப்பநிலையில் உள்ள ஓர் இரும்புக்குண்டினை, 50° C வெப்பநிலையில் உள்ள நீர் நிரம்பிய முகவையில் போடும் பொழுது, வெப்பமானது.

அ) இரும்புக்குண்டிலிருந்து நீருக்குச் செல்லும்
ஆ) இரும்புக்குண்டிலிருந்து நீருக்கோ (அ) நீரிலிருந்து இரும்புக் குண்டிற்கோ மாறாது

ஈ) இரண்டின் வெப்பநிலையும் உயரும்

LIVEWORKSHEETS

II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

5)வெப்பம் பொருளிலிருந்து ....பொருளுக்கு பரவும்.

6) பொருளின் சூடான நிலையானது ..... கொண்டு கணக்கிடப்படுகிறது.

7) வெப்பநிலையின் SI அலகு .....

8) வெப்பப்படுத்தும் பொழுது திடப்பொருள் ..... மற்றும் குளிர்விக்கும் பொழுது .....

9) இரண்டு பொருட்களுக்குக்கிடையே வெப்பப்பரிமாற்றம் இல்லையெனில் அவை இரண்டும் ..... நிலையில் உள்ளன.

வெப்பநிலை வெப்பநிலை அதிகமான, குறைவான விரிவடையும்,சுருங்கும் வெப்பச் சமநிலையில் கெல்வின்

சரியா (அ) தவறா என கூறுக.

10)வெப்பம் என்பது ஒருவகை ஆற்றல். இது வெப்பநிலை அதிகமான பொருளிலிருந்து வெப்பநிலை குறைவான பொருளிற்கு பரவும்.

11) நீரிலிருந்து வெப்பம் வெளியேறும் பொழுது, நீராவி உருவாகும்.

12) வெப்பவிரிவு என்பது. பொதுவாக தீங்கானது.

13) போரோசிலிகேட் கண்ணாடியானது வெப்பப்படுத்தும்பொழுது அதிகம் விரிவடையாது.

14 வெப்பம் மற்றும் வெப்பநிலை இரண்டும் ஒரே அலகினைப் பெற்றுள்ளன.

15)வெப்பம் ஒரு வகை ஆற்றல்.

பொருத்துக.

16) வெப்பம்	0 டிகிரி செல்சியஸ்
17) வெப்ப நிலை	100 டிகிரி செல்சியஸ்
18) வெப்ப சமநிலை	கெல்வின்
19) பனிக்கட்டி	வெப்பம் பரிமாற்றம்
20) கொதிநீர்	ஜூல்

LIVEWORKSHEETS